
# 4 பஞ்சாங்கம்

சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கையும் செயல்முறையும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்று கூறுவர். இவ்வகையில் சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல என்ற நிலையில் எமது சைவ மக்களும் வாழ்ந்து வருகின்றனர். சைவ மக்கள் நீண்ட காலம் பல சைவ ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் கடைப்பிடித்து வாழ்ந்து வருகின்றனர். அதனால் அவர்கள் வாழ்க்கை வளமுடையதாக இருக்கின்றது. வழமையான வாழ்க்கையால் இறைவனை அறியும் உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்றன. பிறப்பு தொடக்கம் மரணமடைதல் வரை சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் எமது சைவ மக்கள் பேணி வருகின்றனர். சகுனம் பார்த்தறிதல், நாள்கோள் பார்த்தறிதல், காகம் கரைதல் பார்த்தறிதல், பல்லி சொல்லும் பலன் பார்த்தறிதல், பல்லி விழும் பலன் பார்த்தறிதல், பஞ்சாங்கம் பார்த்தறிதல் என்பன எமது சமய மக்களுடைய வாழ்க்கையுடன் இணைந்து விட்ட வழக்கங்களும் ஒழுக்கலாறுகளும் ஆகும். இவை தவிர்க்க முடியாதபடி எமது சமய வாழ்க்கையுடன் இணைந்திருப்பதை மாணவர்களாகிய நீங்களும் அறிந்திருப்பீர்கள். ஆதலால் இங்கு கூறப்பட்ட பஞ்சாங்கம் பார்த்தறிதல் பற்றி விரிவாகக் கற்போம்.



பஞ்சாங்கம் என்பது வாரம், திதி, நட்சத்திரம், யோகம் , கரணம் என்னும் ஐந்து முக்கிய உறுப்புக்களை உடையதாகும். வாரம் (கிழமை) (7) ஆகும். இவ்வாரம் சோமவாரம், மங்கல வாரம், புதன்வாரம், பிரகஸ்பதி வாரம், சுக்கிர வாரம், சனிவாரம் என்பன அவையாகும். சூரியன் நிற்கும் இடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தைக் குறித்து நிற்பது திதியாகும். பிரதமை முதல் பூரணை வரை சுக்கில பட்சம் என்றும், பிரதமை முதல் அமாவாசை வரை கிருஸ்ணப் பட்சம் எனவும் அவை இரண்டாக வகைப்படுத்தப்படும். அச்சுவினி முதல் ரேவதி வரை உள்ளவை நட்சத்திரங்களாகும். அவை இருபத்தேழாகும். இந்த இருபத்தேழு நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படுவது யோகமாகும். முப்பது திதிகளுக்கும் அறுபது கரணங்களை குறிப்பிடுவர். இதில் முக்கிய ஐந்து உறுப்புக்களுடன் அயனங்களையும் இணைத்துக் கொள்வர். அயனங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று உத்திராயணம் தை முதல் ஆனி வரை உள்ள காலம். இரண்டாவது தட்சிணாயனம், ஆடி முதல் மார்கழி வரை உள்ள காலமாகும்.

முதல் பஞ்சாங்கம் குப்தப் பேரரசு காலத்தில் ஆரியபட்டர் என்பவரால் வான சாஸ்திர ஆய்வின்படி கோள்களின் நிலை கண்டறிந்து கணிக்கப் பட்டதாக சான்றோர் கூறுவர். இவருக்குப் பின் இதே காலப்பகுதியில் வாழ்ந்த

வராகமிரார் என்பவர் பஞ்சாங்க விடயங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறிச் சோதிடக்கலைக்குப் பெருமை சேர்த்ததாகவும் கருதப்படுகின்றார்.




இதனடிப்படையில் தான் பஞ்சாங்கம் பார்த்தறிதல் வழக்கம் எமது சமய மக்களுடன் இணைந்து விட்டது. இந்தியாவில் வாக்கிய பஞ்சாங்கம், சித்தாந்த பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய மூன்று பஞ்சாங்கங்கள் இருக்கின்றன. ஈழத்தில் திருக்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்ற இரு பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன.இப்பஞ்சாங்கங்களில் திதிகள் சூரியனுக்குரிய உள்ள நாட்களை அன்றி திதிகளை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்பட்டன. முப்பது திதிகள் ஒரு சந்திர மாதமாகும். இது இருபத்தி ஒன்பது அரை சூரியாட்சிகளாகும். (29 1/2) ஒவ்வொரு மாதமும் 15 திதிகளைக் கொண்ட இரு பட்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அமாவாசையுடன் தொடங்கும் பட்சம் சுக்கில பட்சம் என்றும், பௌர்ணமியுடன் தொடங்கும் பட்சம் கிருஸ்ணப்பட்சம் என்றும் அழைக்கப்படும்.

ஆரம்பத்தில் வட இந்தியாவிலும் தக்கண பிரதேசத்திலும் மாதங்கள் பௌர்ணமியிலேயே தொடங்கின. ஆனால் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பொதுவாக அமாவாசையிலே மாதம் தொடங்கியது. இம்முறையிலான பஞ்சாங்கமே இந்து சமய நோக்கங்களுக்காக பாரதம், ஈழம், எங்கும் இன்று வரையும் பயன்படுத்தப்படுகின்றது. சூரிய நாளின் எந்நேரத்திலும் திதி தொடங்கலாம். ஆனால் சூரியன் உதயமாகும் போது எத்திதி உள்ளதோ அத்திதியே அன்று முழுவதும் இருக்கும் எனக்கொள்ளப்படுகின்றது. சந்திர மாதங்கள் சித்திரையில் தொடங்கின. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி,ஆவணி புரட்டாதி,ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, என்பன அவையாகும். பன்னிரண்டு சைவ மாதங்களிலும் 354 நாட்களே உண்டு. சூரிய ஆண்டுகளுக்கும் சந்திர ஆண்டுகளுக்கும் உள்ள முரண்பாடாகும். அறுபத்திரண்டு சந்திர மாதங்கள் அறுபது சூரிய மாதங்களுக்கு சமனாகும். பாரத ஆண்டுகள் ஆறு பருவங்களையும் (இளவேனில் மார்ச் - மே, முதுவேனில் மே-ஜுலை, மழை காலம் ஜுலை - செப்டெம்பர், இலையுதிர் காலம் செப்டம்பர் - நவம்பர், மாரி காலம், நவம்பர்-ஜனவரி, உதிர் காலம் ஜனவரி-மார்ச் என்பன அடிப்படையிலும் பிரபவ முதல் அட்சய வரை உள்ள அறுபது வருடங்களின் அடிப்படையிலும் இப்பருவங்கள் அமைந்துள்ளன.

திருமணப்பொருத்தம், திருமண நிச்சயதார்த்தம், திருமணநாள், பொன்னுருக்கல், என்பவை தொடங்கி புதுமனை கட்டுதல், நிலை வைத்தல், புதுமனை புகுதல், வளைகாப்பு செய்தல், வித்தியாரம்பம், காதுகுத்துதல், சோறு தீற்றுதல், ஏர் மங்கலம் பூட்டுதல், முளைப்புச்சடங்கு, களப்பொங்கல் என்பவற்றுடன் இச்செயற்பாடுகள் நிறைவு பெறும். இவை யாவும் பஞ்சாங்கம் பார்த்தே நிறைவு பெறும். அத்துடன் சமயச் சடங்குகள் என்ற வகையில் ஆண்டு

பொங்கலுக்கு நாள் பார்த்தல், பெரும்பாலும் பஞ்சாங்கத்தின் அடிப்படையிலே ஆகும். ஆகவே பஞ்சாங்கம் பார்க்காமல் எக்கருமங்களையும் எமது சைவ மக்கள் மேற்கொள்ள மாட்டார்கள். பஞ்சாங்கம் பார்க்காமல் செய்யும் காரியங்கள் திருப்திகரமாக இருக்க மாட்டாது என்ற அதீத நம்பிக்கை சைவ மக்கள் மத்தியில் வேரூன்றி விட்டது. ஆகவே மாணவர்களும் இப் பஞ்சாங்கம் பற்றி அறிந்திருப்பது தலையாய கடமையாகும்.

## பயிற்சிகள்

1. பஞ்சாங்கம் என்பதன் பொருள் யாது?
2. திதி எத்தனை வகைப்படும்?
3. நட்சத்திரங்கள் எத்தனை?
4. முதல் பஞ்சாங்கம் எக்காலத்தில் யாரால் கணிக்கப்பட்டது?
5. சந்திர மாதங்கள் எந்த மாதத்தில் தொடங்கும்?
6. பாரதத்தில் ஆண்டுகள் எவற்றின் அடிப்படையில் கணிக்கப்பட்டன?
7. சைவ மக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நற்கருமங்கள் ஐந்து எழுதுக.

## செயற்பாடுகள்

★ பஞ்சாங்கம் பார்த்தறிதல் நன்மையா? தீமையா? என்ற தலைப்பில் வகுப்பறையில் குழுவாகப் பிரிந்து விவாதம் ஒன்று நிகழ்த்திக்காட்டுக.

★ ''பஞ்சாங்கம் பார்த்தறிதல்'' என்ற தலைப்பில் ஐந்து நிமிடமளவில் பேச்சொன்றை நிகழ்த்திக்காட்டுக.

## பாடச்சுருக்கம்

★ சைவ சமய மக்கள் வாழ்க்கையுடன் இணைந்திருப்பது சமய ஒழுக்கலாறுகளும் வழக்காறுகளும் ஆகும்.
★ பஞ்சாங்கம் பார்த்தறிதல் சைவ மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும்.
★ வாரம்,திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்து உறுப்புகளைக் கொண்டது பஞ்சாங்கமாகும்.
★ முதல் பஞ்சாங்கம் குப்த பேரரசு காலத்தில் தோன்றியது.
★ இந்தியாவில் வாக்கிய பஞ்சாங்கம், சித்தாந்த பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்ற மூன்று பஞ்சாங்க வகைகள் உண்டு.
★ ஆறு பருவங்கள், இரு பட்சங்கள், இருபத்தேழு நட்சத்திரங்கள், ஏழு வாரங்கள் என்பவற்றின் அடிப்படையில் பஞ்சாங்கம் கணிக்கப்படும்.
★ சைவ மக்களின் அன்றாட கருமங்கள் அனைத்தையும் பஞ்சாங்கம் பார்த்தே மேற்கொள்வர்.